2015 செப்டம்பர் 28]

364—

வீட்டுமனைப் பட்டா

***38542 திரு. வி. சோமசுந்தரம்:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரம் தொகுதி, சித்தேரிமேடு பகுதியில் குடியிருப்பவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

முற்பகல் 11–00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்—விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.*

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் இப்பேரவைக்கு திருத்திய விடையை அளிக்கிறேன்.*

(அ) மற்றும் (ஆ) காஞ்சிபுரம் வட்டம், சித்தேரிமேடு கிராம புல எண் 1 மற்றும் புல பட்டா எண் 27–ல், கொல்லா சிங்கண்ண செட்டியார் தர்ம ஸ்தாபன பரம்பரை தர்மகர்த்தா கொல்லா வெங்கட கண்ணையா செட்டியார் என்ற தர்ம ஸ்தாபனத்தின் பெயரில் கிராமக் கணக்கில் உள்ளதாலும், நீதிமன்றத்தில் வழக்கு W.P.No. *2551/2008 நிலுவையில் உள்ளதாலும், மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, நீதிமன்றத் தீர்ப்புக்குப் பின்னர் உரிய நடவடிக்கையை மேற்கொள்ளும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. சோமசுந்தரம் அவர்கள்.*

திரு. வி. சோமசுந்தரம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கும் வெற்றி! எதிலும் வெற்றி! உலக முதலீட்டாளர்கள் மாநாட்டிலும் வெற்றி! (மேசையைத் தட்டும் ஒலி) அந்தமானிலும் வெற்றி! அண்டை மாநிலமான*

புதுச்சேரியிலும் வெற்றி! வாகைத் தாய்க்கு வழியெங்கும் வெற்றி! தெய்வத் தாய்க்கு திசையெங்கும் வெற்றி! வெற்றி மேல் வெற்றியைக் குவிக்கும் (மேசையைத் தட்டும் ஒலி) தென்னகத்து ஜான்சி ராணி, எங்கள் ஆராதனைக்குரிய தெய்வம் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களை நன்றியுடன் வணங்குகிறேன்.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள், "அந்த நிலம் குறித்த வழக்கு நீதிமன்றத்தில் நிலுவையில் இருக்கின்றது" என்று கூறினார். எனினும், அந்த வழக்கினை மிக விரைவில் முடித்து, காஞ்சிபுரம் வட்டம், சித்தேரிமேடு கிராமத்தில் கொல்லா சிங்கண்ண செட்டியார் தர்ம ஸ்தாபனத்திற்குச் சொந்தமான நிலத்தில் சுமார் 100 ஆண்டுகளுக்கு மேலாக வீடு கட்டி வசித்துவரும் விவசாய மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கிட ஆவன செய்யுமாறு தங்கள் வாயிலாகக் கேட்டு அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏழை மக்கள் வீடுகளின்றி இருக்கக்கூடாது என்பதுதான் மாண்புமிகு அம்மா அவர்களுடைய புனித அரசின் உயரிய நோக்கமாகும். அந்த வகையில், மாண்புமிகு அம்மா அவர்களுடைய புனித அரசு, தகுதியுள்ள நிலங்கள் எங்கெங்கு இருக்கின்றனவோ, அங்கெல்லாம் வீட்டுமனைப் பட்டாக்களை வழங்கி வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட நிலம், தனியார் தர்ம ஸ்தாபனத்திற்குச் சொந்தமான நிலம் என்கிற தாவா நீதிமன்றத்தில் நிலுவையில் இருக்கின்றது. எனவே, தனியார் நிலங்களை வீட்டுமனையாக ஒதுக்கீடு செய்து, பட்டா வழங்குவதற்கு அரசுக்கு அதிகாரம் கிடையாது. ஆகவே, அது அரசு இடமா அல்லது தனியார் தர்ம ஸ்தாபனத்திற்கு உரிய இடமா என்கிற தாவாவிற்கு நீதிமன்றத்திலிருந்து தீர்ப்பைப் பெற்றதற்குப் பின்னால், அந்த நிலம் அரசுவசம் வரும்பட்சத்தில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு, பட்டா வழங்க உரிய முறையில் நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2015 செப்டம்பர் 28]

மேலும், இதுவரை வருவாய்த் துறை வரலாற்றில் இல்லாத வகையில், ஏழையெளிய மக்களின் நல்வாழ்வுக்காக, நலிந்த பிரிவினரின் நல்வாழ்வுக்காக, சாமானிய மக்களின் நல்வாழ்வுக்காக, கடந்த நான்கு ஆண்டுகளில் 8½ இலட்சம் வீட்டுமனைப் பட்டாக்களை வழங்கிய ஒரே அரசு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்கூட நன்கு அறிவார்கள் என்பதையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. கதிரவன் அவர்கள்.*

திரு. பி.வி. கதிரவன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தின் நீர்நிலைப் புறம்போக்கு இடங்களில் 20 ஆண்டுகளுக்கும் மேலாக வீடு கட்டி, சாலை வசதி, குடிநீர் வசதி போன்றவற்றைப் பெற்று மக்கள் வாழ்ந்து வருகிறார்கள். அவர்களுக்குப் பட்டா கொடுக்கின்ற நிலை இருக்கின்றபோது, உச்ச நீதிமன்றம், "நீர்நிலைப் புறம்போக்கு நிலங்களில் வசிப்போருக்கு எந்தவித பட்டாவும் கொடுக்கக்கூடாது" என்ற உத்தரவினை வழங்கியிருக்கிறது. இந்நிலையில், மீண்டும் உச்ச நீதிமன்றத்தில் மறுசீராய்வு மனுவை தமிழக அரசின் சார்பில் தாக்கல் செய்து, 20 ஆண்டுகளுக்குமேல் நீர்நிலைப் புறம்போக்கு இடங்களில் வாழ்ந்து வருபவர்களுக்கு பட்டா வழங்குவதற்கு தமிழக அரசு முன்வருமா என தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 11–05

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீட்டுமனை ஒப்படை, வருவாய் நிலை ஆணை எண் 21–ன்கீழ், வரையறைக்குட்பட்டு வழங்கப்படுகிறது. அந்தவகையில், மாண்புமிகு அம்மா அவர்களுடைய புனித அரசு, ஆட்சேபகரமான புறம்போக்குகள் மற்றும் நீர்நிலைப்*

புறம்போக்குகள் போன்ற இனங்களைத் தவிர்த்து, பிற ஒப்படை செய்யக்கூடிய நிலங்களில் குடியிருப்போருக்கு வீட்டுமனைப் பட்டாக்களை வழங்கி வருகிறது. 20 ஆண்டுகளுக்கும் மேலாக நீர்நிலைகளில் வசிப்பவர்களுக்கு, பட்டா வழங்குவதற்கு உச்ச நீதிமன்றத்தின் தடையாணை இருக்கிறதென்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களே இங்கு எடுத்துக்காட்டினார்கள். நம்முடைய மாண்புமிகு அம்மா அவர்களது அரசு, அங்கிருக்கக்கூடியவர்களுக்கு உரிய பட்டா வழங்க முயற்சிக்குமா என்றும் கேட்டிருக்கின்றார்கள். நீர்நிலைகளைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு அரசுக்கும் இருக்கிறது. வருங்கால சந்ததியினருக்கும் அவற்றைப் பாதுகாத்து வழங்க வேண்டிய பொறுப்பு அரசுக்கு இருக்கிறதென்பதன் அடிப்படையில், அதற்கு உரிய முறையீடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. இருந்தபோதிலும், அதுபோன்ற நீர்நிலைகளில் இருப்பவர்களுக்கு, மாற்று இடங்களைத் தேர்வு செய்து, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு பட்டாக்களை வழங்கி வருகிறது. அதன் அடிப்படையில், இதுவரை இல்லாத வகையில், 8½ இலட்சம் வீட்டுமனைப் பட்டாக்களை வழங்கியிருக்கின்ற ஒரே அரசு, மாண்புமிகு அம்மா அவர்களுடைய புனித அரசு என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. தங்கவேல் அவர்கள்.*

திரு. கே. தங்கவேல்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூர் மாவட்டம், இராயபுரம் மிலிட்டரி காலனி பகுதியில், ஒரு பகுதிக்குப் பட்டா கொடுக்கப்பட்டு, இன்னொரு பகுதிக்கு நீண்டகாலமாகப் பட்டா கொடுக்கப்படாத நிலை உள்ளது. அது சம்பந்தமாக பலமுறை கோரிக்கைகளும் கொடுக்கப்பட்டுள்ளன. அதனை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கவனித்து, பட்டா கொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமாய் தங்கள்மூலம் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.*

2015 செப்டம்பர் 28]

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன அந்த நிலத்தின் வகைப்பாடுகளையெல்லாம் ஆய்வு செய்து, உரிய முறையில் மாண்புமிகு அம்மா அவர்களது அரசு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மீதமுள்ள வினாக்கள் பின்னர் எடுத்துக்கொள்ளப்படும்.*

(ஆ) உடுக்குறியிடாத வினாக்கள்

(பட்டியல் 15)[@]

1—

கண்மாயைத் தூர்வாருதல்

வினா எண் 26629—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மானாமதுரை தொகுதி, சாத்தணி கண்மாயைத் தூர்வாரி சீரமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, இளையான்குடி ஒன்றியத்தில் உள்ள சாத்தணி கண்மாய் நீர்வள நிலவள திட்டம் பகுதி 1-ல் கோட்டக்கரையாறு உபவடிநிலம் தொகுப்பு எண் 9-ல் எடுத்துக்கொள்ளப்பட்டு, 2009-2010-ஆம் ஆண்டில் கண்மாய் கரையினை பலப்படுத்தும் பணிகள்

[@] இப்பட்டியலில் உள்ள வினாக்களுக்கான விடைகள் அந்தந்த அமைச்சர்கள் ஒப்புதல் அளித்த தேதியன்று உள்ளபடி அமைந்தனவாகும்.